**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 301/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திரு. சௌந்தரராஜன் |
| Father's Name/Husband Name: | திரு. செங்கோட்டுவேல் |
| Village : | மங்கூன் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 62 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 5 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறையில் ஓட்டுநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். கடந்த 04.12.2022 அன்று காலை சுமார் 8 மணியளவில் எனது மனைவியும் எனது சித்தப்பா மகனும் மாடு மேய்க்க சென்றார்கள். அப்போது மாடு வேறொரு தோட்டத்திற்கு சென்று கொண்டிருந்தது. எதிரி ராமன் செட்டியார் தடி எடுத்து வந்து எனது மனைவியின் இடது பக்க தொடையிலும், எனது சித்தப்பா மகனுக்கு இடது கால் முட்டியிலும் அடித்துவிட்டு தகாத வார்த்தையால் பேசினார். எதிரி கோவிந்தன் என்பவர் சித்தப்பா மகன் சுப்ரமணியனை கழுத்துப்பிடித்து தள்ளிக் கொண்டு போயிருக்கிறார். சம்பவம் நடக்கும்போது நான் வெளியில் இருந்தேன். எனக்கு போன் மூலம் எனது மனைவி தகவல் தெரிவித்தார் நான் உடனடியாக காரை கொண்டு வந்து என் மனைவியையும், சுப்ரமணியையும் பெரம்பலூர் அரசு

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்தேன். போலிசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள் மருத்துவமனையில் விசாரித்தார்கள். எந்த தேதியில் எந்த நேரத்தில் சம்பவம் நடந்ததாக எனக்கு தகவல் தெரிந்தது என்றால் சம்பவம் நடந்த அன்றே காலை 10 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது. எனக்கு தகவல் கிடைத்ததன் அடிப்படையில் நான் தான் கார் கொண்டு வந்தேன் என்றால் சரிதான்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.